பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 05 2025 **WEDNESDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட 103 ரயில் நிலையங்கள் நாளை திறக்கப்பட உள்ளது வரலாற்று சிறப்பு மிக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்திற்கு நியாயமான நிதி உரிமையை வலியுறுத்த வேண்டும் என்ற நோக்கில் நித்தி ஆயோக் கூட்டத்தில் தாம் பங்கேற்க உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

3. மூன்றாண்டுகளாக நித்தி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்காமல் முதலமைச்சர் தற்போது இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்கு அமலாக்கத்துறை சோதனைதான் காரணமா என்று அஇஅதிமுக வினவியுள்ளது.

4. தமிழகத்திற்கு பாரபட்சமின்றி மத்திய அரசு நிதியுதவி வழங்கி வருவதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Kanak** தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

நாடு முழுவதும் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட 103 ரயில் நிலையங்கள் நாளை திறக்கப்பட உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், ரயில்வே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இந்நாள் வரலாற்று சிறப்புமிக்க நாள் என்று குறிப்பிட்டுள்ளார்.

பயணிகளுக்கான மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் கலாச்சார பிரதிபலிப்பு கொண்டதாக இந்த ரயில் நிலையங்கள் திகழும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ள சமூக வலைதள செய்தியையும் திரு நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

இதற்கிடையே, தமிழகத்தில் உள்ள ஒன்பது ரயில் நிலையங்களும் இந்த திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளன.

நாளை இந்த ரயில் நிலையங்கள் திறக்கப்பட உள்ளதையடுத்து அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை ரயில் நிலையம் ஆறு கோடி ரூபாய் செலவில் பயணிகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - குமார் - 49 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

தமிழகத்திற்கு நியாயமான நிதி உரிமையை வலியுறுத்த வேண்டும் என்ற நோக்கில், நித்தி ஆயோக் கூட்டத்தில் தாம் பங்கேற்க உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இரட்டை நிலைப்பாட்டை கடைபிடிக்கும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, தம்மை பார்த்து வெள்ளைக்கொடி ஏந்தியதாக பேசுவதா என்றும் வினவியுள்ளார்.

தமிழகத்தின் உரிமைக்காக உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கும் கூட வழக்கு தொடுத்துள்ளதாகவும் திரு மு.க.ஸ்டாலின் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

நித்தி ஆயோக் கூட்டத்தை மூன்றாண்டுகளாக புறக்கணித்துவிட்டு தற்போது அதில் பங்கேற்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் செல்வது ஏன் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது என்று கூறி, கடந்த கூட்டங்களில் முதலமைச்சர் பங்கேற்காததை சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது குடும்ப நலனை கருத்தில்கொண்டுதான் இக்கூட்டத்தில் பங்கேற்க முடிவு எடுக்கப்பட்டதா என்றும் அவர் வினவியுள்ளார்.

கச்சத்தீவு முதல், காவிரி வரை தமிழகத்தின் உரிமையை தாரைவார்த்த திமுக, மாநில உரிமை பற்றி பேசினால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

டாஸ்மாக் மதுபான முறைகேடு தொடர்பாக அமலாக்கத்துறை நடத்திய சோதனையில் முதலமைச்சருக்கம், முதலமைச்சர் குடும்பத்திற்கும் பங்கு இருக்கிறதா என்ற சந்தேகம் மக்களிடையே வலுவாக எழுந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமலாக்கத்துறை சோதனை என்றதும், திரு மு.க.ஸ்டாலினுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நெருக்கமான ஒருவர் நாட்டைவிட்டே ஏன் தப்பிச்சென்றார் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்திற்கு எவ்வித பாரபட்சமும் இன்றி மத்திய அரசு நிதியுதவி வழங்கி வருவதாக பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நித்தி ஆயோக் கூட்டத்தை இதுவரை புறக்கணித்துவந்த முதலமைச்சர் தற்போது பங்கேற்பது என்ற முடிவிற்கான காரணம் தெரியவில்லை என்றார்.

ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், இந்தியாவின் சார்பில் தாம் பங்கேற்றதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆட்சியை ஆஸ்திரேலிய மக்கள் வெகுவாக பாராட்டுவதாகவும் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

அரபிக்கடல் பகுதியில் அடுத்த 12 மணிநேரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***Sound Byte** - செந்தாமரை கண்ணன் (1) - 47 Sec.)*

கடல் பகுதியில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.

***Sound Byte** - செந்தாமரை கண்ணன் (2)- 26 Sec.)*

<<<<<>>>>>>

கல்குவாரிகளில் ஏற்படும் விபத்துகளை தடுக்க தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தனியார் கல் குவாரியில் நேரிட்ட விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

குவாரிகளில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்காணித்துவரும் தொழிற்சாலை பாதுகாப்பு பிரிவு செயலிழந்து இருப்பதையே இது உணர்த்துவதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

விதிமுறைகளை மீறி செயல்படும் குவாரிகளை தடை செய்ய வேண்டும் என்றும் திரு முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>

பாமக-வில் நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு மற்றும் அன்புமணி ராமதாசுக்கு இடையே சுமூக நிலை எட்டப்பட்டுள்ளதாக அக்கட்சியின் கௌரவத் தலைவர் திரு ஜி கே மணி கூறியுள்ளார்.

தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், விரைவில் இருவரும் சந்திக்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் பணிகள் தொடர்பாக இன்று நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டதாகவும், கூட்டணி குறித்து இதில் விவாதிக்கப்படவில்லை என்றும் திரு ஜி கே மணி கூறினார்.

<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டம் மேலூர் - அழகர்கோவில் இடையே நடைபெற்றுவரும் சாலை விரிவாக்கப்பணிகளை மாநில அமைச்சர்கள் திரு எ வ வேலு, திரு மூர்த்தி ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஸ்ரேயா குப்தா தலைமையில் நடைபெற்றது.

தேனி மாவட்டம் கடமலைகுண்டு அருகே யானைகள் தோப்புக்குள் புகுந்து நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்களை சேதப்படுத்தின.

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Kanak** தங்கப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் **Suhl** –ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது

Irish ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-8, 11-6, 11-4 என்ற செட் கணக்கில், சிங்கப்பூரின் **Wai Yhann Au Yeong**–ஐ வென்றார்.

<<<<<>>>>>